## சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

(சட்டமியற்றுத்துறை)

புது டில்லி, 2011, செப்டம்பர் 23

பின்வரும் நாடாளுமன்றச்சட்டம், குடியரசுத்தலைவரின் இசைவினை 2011, செப்டம்பர் 23 அன்று பெற்று, பொது தகவலுக்காக ஈங்கிதனால் வெளியிடப்படுகிறது:-

## 2011ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஆறாம் திருத்தச்) சட்டம்

(2011, செப்டம்பர் 23]

இந்திய அரசமைப்பினை மேலும் திருத்தம் செய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

1. இந்தச் சட்டம், 2011ஆம் ஆண்டு அரசமைப்பு (தொண்ணூற்று ஆறாம் திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

2. அரசமைப்பிற்கான எட்டாம் இணைப்புப் பட்டியலில், 15ஆம் பதிவில், ‘‘ஓரியா’’ என்ற சொல்லுக்குப் பதிலாக ‘‘ஒடியா” என்ற சொல் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். எட்டாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.